| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>குழந்தை<br>த.பெ. பெரியசாமி | அ.வ.எண். 72/2018 | 04.06.2025 |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கில் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிழ்வழக்குரை மற்றும் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளுக்கான தகவல்களை தெரிவித்தது நான் தான் என்றால் சரிதான். எனது மகன், மருமகள் பெயர் என்ன என்றால் மகன் பெரியசாமி, மருமகள் கோகிலா ஆகும். தாவா சொத்து எனது மகன் மற்றும் மருமகளின் அனுபவத்தில் உள்ளதற்கு சிட்டா, அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2) தாவா சொத்தில் எக்காலத்திலும் எனது மகன் மற்றும் மருமகளுக்கு எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல, 1980 ல் இருந்தே தாவா சொத்தில் நாங்கள் தான் இருந்தோம். 1980 ல் இருந்து தாவா சொத்தில் நாங்கள் இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மகாமுனி, சோழன், பனையடியான் ஆகியோர் வாதி வெங்கடேசின் மூதாதையர்கள் என்றால் சரிதான்.

3) மேற்படி மூதாதையர்களுக்கு இடையே பாகம் பிரிந்துள்ளதாக எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன், ஆனால் அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை எப்போது ஏற்பட்டது என்று குறிப்பிட்டு எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ, எதிர்வழக்குரையிலோ கூறவில்லை என்றால் சரிதான்.

4) 17.07.2017 ல் மண்ணச்சநல்லூர் சார்பதிவகத்தில் ஆவண எண்.1613/2017 தான செட்டில்மெண்ட் ஆவணத்தை பனையடினானின் வாரிசுகள் எனக்கு ஏற்படுத்தி கொடுத்ததை எதிர்த்து நான் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எதிர்பரிகார கோரிக்கை எதுவும் கோரவில்லை என்றாலும் மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். அதற்கு ஆதரவாக புகார் மனு ரசீது ஏதேனும் உள்ளதா என்றால் எனது மகனிடம் உள்ளது. மேற்படி புகார் மனு ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

5) மேற்படி தான செட்டில்மெண்ட் படி வாதிக்கு வழக்கு சொத்து பாத்தியப்பட்டு, நாளது தேதி வரை வாதியின் உரிமையிலும், அனுபவத்திலும் வழக்கு சொத்து உள்ளது என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்பதால் தான் மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய தற்போது வரை எவ்வித நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 10.06.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.